Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Ethics of Life in Sangam Literature

**S.Shanmugasundaram,** Ph.D.Scholar (Full Time), Department of Tamil,
Pachiyappa's College, Chennai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-8134-9631**
**DOI: 10.5281/zenodo.6619535**

## Abstract

*The people who lived during the Sangam period preserved certain cultures, virtues and biological elements for themselves and gave as much material as they could to others and excelled in the nature of the fly. The Tamil man received the materials he needed in a moral way. They lived a life of morality. They also thought that war should be fought by following the morals. He thought of others beyond himself and lived to see the suffering of others as his own suffering. Such theoretical biological theories abound in Sangam literature. Therefore, the purpose of this article is to convey the ideas expressed in the Sangam poetry to the people living in today's society.*

**Keywords:** Sangam, Literature, Life, Virtue.

.

## References

[1] Kalaiyarasi. *Grammar Showing Introspection*.
[2] N. Subbureddiyar. *Life Showing Tolkappiyam*.
[3] Sundara Autayappan. *Thirukkural Simple Text*.
[4] K.U.Ve. Bala Subramaniam. *Purananuru* (Source and text). New Century Book House.
[5] V. Nagarajan. *Kurunthigai* (Source and text). New Century Book House.
[6] A. Viswanathan. *Kalinthigai* (Source and text). New Century Book House.
[7] S. Jayakumar. *Humanistic Thought in Classics*.
[8] P.Mathayan. *Family in Sangam Literature*.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# சங்க இலக்கியத்தில் வாழ்வியல் அறம்

**சு.சண்முகசுந்தரம்**, முனைவர்பட்ட ஆய்வாளர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-8134-9631
DOI: 10.5281/zenodo.6619535

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் தனக்கென சில பண்பாடுகளையும், அறங்களையும் வாழ்வியல் கூறுகளையும் பேணிக் காத்து தன்னால் இயன்ற அளவுக்கு பொருளை மற்றவர்களுக்கு கொடுத்து ஈகை பண்பிலும் தலை சிறந்தவர்களாக விளங்கினர். தனக்கு தேவையான பொருள் அறவழியிலேயே பெற்றனர். இல்வாழ்க்கையை அறவாழ்க்கையாக கொண்டு வாழ்ந்தனர். போரிலும் அறநெறிகளைப் பின்பற்றி போர்புரிய வேண்டும் என நினைத்தனர். தன்னைத் தாண்டி பிறரைப் பற்றி சிந்தித்தும் பிறர் துன்பத்தை தன் துன்பமாகக் கருதி வாழ்ந்தனர். இவை போன்ற அற வாழ்வியல் கோட்பாடுகள் சங்க இலக்கிய நூல்களில் மிகுதியாக காணப்படுகின்றது. எனவே இவ்விலக்கியங்களில் கூறப்படும் கருத்துகளை இன்றைய சமூகத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு வாழ்வியல் அறங்களை எடுத்து கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.*

**திறவுச்சொற்கள்:** சங்கம், இலக்கியம், வாழ்வு, அறம்

**முன்னுரை**

பழந்தமிழரின் செம்மாந்த வாழ்வியல் நெறிகளையும் அவர்களின் நிலைத்து நிற்கும் வரலாறுகளையும், நாம் அறிந்து போற்றுவதற்குத் துணை நிற்பன சங்க இலக்கியங்கள். இவை இன்றைய வாழ்வுக்கு வழிகாட்டியாகவும், எதிர்கால வாழ்வை வளமுடையதாக்கவும், மனிதனின் அகந்தையை அகற்றவும் மனித நேயம் மலரவும், அறம் தழைத்தோங்கவும் சிறந்த கருவியாக துணை நிற்கின்றன. வேகம் நிறைந்த வாழ்க்கை சூழலில் மனித பண்புகளும் வாழ்வியல் அறங்களும் மதிப்பிழந்து சமூகத்தை பெரிதும் பாதித்துள்ளது. மனித பண்புகளைத் திரும்பி பார்க்கக்கூட நேரமில்லாமல் நகர்ந்துக் கொண்டிருக்கிறோம். இத்தகைய சமூகத்தினை நெறிப்படுத்தி மேம்பாடடைய தமிழ் இலக்கியங்களின் பங்கு இன்றியமையாததாகும். எனவே சங்க இலக்கியங்களில் காணப்படும் வாழ்வியல் அறங்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**அறம் விளக்கம்**

மனிதனின் வாழ்வியல் அடிப்படைப் பண்புகளே அறமாகும். அந்த பண்புகளின் அறநெறியே மாந்தரின் நல்வாழ்வுக்கு அடிப்படையாக அமைகிறது. என்பதை

**அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம் (குறள்: 35)**

எனத் திருவள்ளுவரும்

**அறத்து வழிப் படூஉம் தோற்றம் போல (புறம்: 31)**

எனக் கோவூர்கிழாரும்

**"பிறவிதோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே அறம்"** என்று (திருக்குறள், நீதி இலக்கியம் – பக் 23) அறத்திற்கு விளக்கம் தருகிறது. அறம் என்ற சொல் நன்மை, ஈகை, நீதி, கடமை, தருமம், கற்பு, புண்ணியம் என அகராதி பொருளுரைக்கிறது. சுருங்க கூறின் "நல்லவை செய்தலும் அல்லவை செய்யாதிருத்தலும் எனலாம். மனிதன் தனியாகவும் சமூகத்தில் ஒரு அங்கமாகவும் இயங்குவதற்கு அவனது பண்பு நலன்களே அறமாக உதவ சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் பெரிதும் உதவுகின்றன. இவற்றின் மூலம் மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே அறம் என்று கூறலாம். இவ்வறம் அக வாழ்விலும், புற வாழ்விலும் கடைபிடிக்கப்பட வேண்டிய ஒன்றாக அமைகிறது.

**சமூக அறம்:**

பண்டைய சமுதாயத்தில் மக்களிடையே வாழ்வியல் அறநெறிகள் முறையாக அமைந்திருந்தன. அரசர் உட்பட அவரவர் தம் கடமையை முறையாக ஆற்றுவதையே அறமாக எண்ணியிருந்தனர் என்பதை

**ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்கு கடனே**
**வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**தண்ணடை நல்கல் வேந்தற்குக் கடனே**
**ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கி**
**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே (புறம் : 312)**

என்ற பொன்முடியார் பாடல் குடும்ப கடமை மட்டுமல்லாது, நல்ல சமூகத்தை உருவாக்குவது மன்னனின் பங்கும் பெரிது என்கிறார். இதன் மூலம் மனிதன் தனியானவன் அல்ல. அவன் சமூகக் கடலில் ஒருதுளி, அவனுக்குள்ளே சமூகம் – சமூகத்துக்குள்ளே அவன் என்று வாழும் இயல்பு கொண்டவனாக விளங்குகிறான். சமூதாயத்தில் அங்கமாகவும், உறுப்பாகவும் திகழுக் கூடிய தனி மனிதனின் வாழ்வு செழித்தால் தான் சமூதாயம் செழித்து வளம் பெறும். அதுபோல மக்கட் சமுதாயம் தங்கள் நலத்தையே பெரிதாக கருதாமல், பிறர் நலத்தையும் பேணுதல் வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனும் தான் மேற்கொள்ளும் அறங்கள் மூலமாகத்தான் சமூதாய மேம்பாட்டை உருவாக்க முடியும். அதனால் தான் புறநானூற்றுப் பாடல்,

**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே (புறம்: 187)**

என்று ஒழுக்க நெறிமுறைகளை பறை சாற்றுகின்றன.

**இல்லறத்தில் அறம்**

தமிழர்கள் அறத்தோடு பொருந்திய வாழ்வினை மேற்கொண்டனர். கணவனும், மனைவியும் இணைந்து, இல்லத்தில் இருந்து அறங்கள் புரிவதே இல்லறம் ஆகும். இதை வள்ளுவரும்

**அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
**பிறன்பழிப்ப தில்லாயின் நன்றி (குறள்: 39)**

என்கிறார்.

அறம் என சிறப்பித்து சொல்வது இல்வாழ்க்கையையே, ஆணும், பெண்ணும் ஒருமித்த கருத்துடனும், சிந்தனையுடனும் இணைந்து வாழ்வதே இல்லற வாழ்க்கையாகும். இன்று வாழ்க்கைக்கு

அர்த்தம் புரியாமலே வாழ்ந்து கொண்டிருப்போர் பலர். ஆனால் சங்க இலக்கியங்கள் வாழ்க்கை என்பதற்கு இலக்கணம் வகுக்கிறது.

**ஒன்றன் கூறாடை யுடுப்பவரே யாயினும்**
**ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை (கலி: 18)**

என்னும் கலித்தொகை வரியால் அறியலாம்.

மனம் ஒத்த அன்பே இல்லற வாழ்க்கையில் சிறக்கும். இதனால்தான் அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் என்றும் அன்பின் வழியது உயர்நிலை என்றும் கூறினார் வள்ளுவப் பெருந்தகை. கணவனும் மனைவியும் ஒற்றுமையோடு இறுதிவரை வாழ்ந்தால் வீடுபேறு தானாக வந்தெய்தும் என்பது தமிழரின் கொள்கையாக இருந்தது. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழும் வாழ்க்கை தான் அன்புகலந்த வாழ்க்கை. கணவன் தன்னைவிட அறிவும், மதிப்பும், பெருமையும், அதிகமாக கொண்டிருக்க வேண்டும். ஆனால் தன்னிடத்தில் அன்பு வைத்திருக்க வேண்டும் என்பதையே மனைவி விரும்புவாள் இதனை,

**இம்மை மாறி மறுமை ஆயினும்**
**நீ ஆகியர் எம் கணவனை**
**யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே (குறுந் : 49)**

என இப்பிறவிலும் மறுபிறவியிலும் நீயே என் கணவராக வரவேண்டும் அப்போதும் உம் நெஞ்சத்தில் நான் முழுமையாக இடம் பெற வேண்டும் என்று கூறுகையில் மனைவி கணவன் தன் மீது அன்பு கொண்டிருக்க வேண்டும் என ஏங்குவது புலனாகிறது. இல்லறத்தில் இருவரும் இணைந்து ஆற்ற வேண்டிய அறம் விருந்தோம்பல். இப்பண்பு பெண்களின் சிறந்த அறப்பண்புகளுள் ஒன்றாக கருதப்படுகிறது. நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு உண்டு என்பதை,

**அல்லிலாயினும் விருந்து வரின் உவக்கும்**
**முல்லைச் சான்ற கற்பின்**
**மெல்லியல் குறுமகள் உறைவின் ஊரே (நற்: 142)**

என்று தலைவன் தன் மனைவியின் விருந்தோம்பல் பாங்கினை நினைத்து உள்ளம் மகிழ்கிறான். மேலும் விருந்தினர் உண்டபின் எஞ்சிய உணவையே மகிழ்வுடன் உண்டனர். இதனை,

**விருந்து உண்டு எஞ்சிய மிச்சம் பெருந்தகை**
**நின்னோடு உண்டலும் புரைவது (கு.பா: 206 – 207)**

என்னும் அடிகள் மூலம் அறியலாம்.

சங்ககால மக்கள் ஈதலையும், விருந்தோம்புதலையும் இரு கண்களாக கருதி அவற்றை வாழ்வில் பின்பற்றி வந்தனர். தன் வீட்டிற்கு வந்தவர்களை வறிய நிலையிலும் இன்முகம் காட்டி விருந்தளித்து மகிழ்ந்தனர். என்பதை

**வரகும் தினையும் உள்ளவை எல்லாம்**
**இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தென**
**குறித்து மாறு எதிர்ப்பை பெறா அமையின்**
**குரல் உணங்க விதைத்தினை உரல்வாய்ப் பெய்து**
**சிறிது புறப்பட்டன்றோ இலளே (புறம்: 333)**

என்ற புறநானூற்றுப்பாடல் தனது வீட்டில் தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குத்தியெடுத்து விருந்தினருக்குச் விருந்தளித்தனர் என்பது புலனாகிறது. இல்லறத்தை நடத்தும் தலைவி தன் இல்லத்தின் வாயிலை மூடுவதற்கு முன்னர், உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா? என்று கேட்கும் வழக்கம் சங்க மக்களிடையே உள்ளது என்பதை

**பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்**
**வருவீர் உளீரோ? (குறுந்: 118)**

என்ற அடிகள் உணர்த்துகிறது. இல்லறத்தில் நல்லறம் செய்வதற்கு ஏற்ற வகையில் வாழ்ந்திருக்கிறார்கள் என்று இதன் மூலம் தெளிவாகிறது.

**போரில் அறம்**

தமிழர் போரிலும் அறநெறிகளைப் பின்பற்றி போர் புரிந்தனர். போரில் வீரமற்றோர் புறமுதுகிட்டோர் சிறார், பெண்கள் நோயாளர் புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிந்தனர் என்பதை

**ஆவும் ஆன் இயற் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும், பிணியுடையீரும் பேணித்**
**தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போல் புதல்வர்ப் பெறா அதீரும்**
**எம் அம்பு கடி விடுதும் நும் அரன் சேர்மின் (புறம்: 9)**

யாம் எம் அம்புகளை விரைவு படச் செலுத்தி போரிட உள்ளோம் நீங்கள் அனைவரும் உங்களுக்கு பாதுகாப்பான இடத்திற்கு செல்லுங்கள் என்றும், மேலும் தம்மைவிட வலிமை குறைந்தவரோடும், தன்னெதிரே ஆயுதம் இல்லாமல் நிற்போரிடமும் போர் செய்ய கூடாது என்பதில் உறுதியாக இருந்துள்ளனர்.

**முரசு முழங்கு தானை நும் அரசும் ஒம்புமின்**
**ஒளிறு ஏந்து மருப்பின் நும் களிறும் போற்றுமின்**
**எனை நாள் தங்கும்நும் போரே, அனைநாள்**
**எறியார் எறிதல் யாவணது? எறிந்தோர்**
**எதிர்சென்று எறிதலும் செல்லான் (புறம்: 301)**

இவ்வாறு அறநெறிப்படி போரிட்டு போரின் கொடுமையிலிருந்து மக்களை காத்து மண்ணுயிருக்கு சிறப்பு செய்துள்ளனர். சங்க காலப் போர் முறைக்கும் இக்கால போர்முறைக்கும் பல வேறுபாடுகள் உள்ளன. அக்காலத்தில் எதிர் நாடுகளோடு நேருக்கு நேர் நின்று அறநெறிப்படி போர் செய்தனர். இக்காலத்தில் அறநெறி இல்லாமல் வான் வழியிலும் தரைவழியிலும் கடல் வழியிலும் வரைமுறையில்லாமல் எதிரிகளை தாக்குகின்றனர். இதன் மூலம் சங்க காலத்து மக்களிடம் அறம் மலிந்திருந்தது என்பதை அறியமுடிகிறது.

**முடிவுரை**

நாம் புதியதொரு சமுதாயத்தை உருவாக்க உயர்ந்த எண்ணங்களை கொண்ட மனிதர்களை உருவாக்குவதன் மூலம் சமூதாயத்தை உருவாக்க முடியும். மனிதர்களை உருவாக்குவதற்குப் பெருமளவு தமிழ் இலக்கியங்களில் உள்ள வாழ்வியல் சிந்தனைகள் உதவும். இலக்கியங்களில் குவிந்து கிடக்கின்ற

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

மனித வாழ்வியல் கருத்துகளான, அறம், தனிமனித ஒழுக்கம், இல்லறம், ஈகை, விருந்தோம்பல், அரசியல் விழிப்புணர்வு போன்றவற்றை நம் வாழ்க்கை பயணங்களில் கையாண்டால் நமது வாழ்வு ஒளி பெறும் என்பதில் ஐயமில்லை. இலக்கியங்களை கற்று இப்புவியில் இன்பமான வாழ்க்கையை வாழ்வோம்.

**துணை நூற்பட்டியல்**

[1] தி. கலையரசி. *இலக்கணம் காட்டும் அகவாழ்வு.*
[2] ந.சுப்புரெட்டியர். *தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை.*
[3] சுந்தர ஆவுடையப்பன். *திருக்குறள் எளிய உரை.*
[4] கு.வெ. பால சுப்பிரமணியம். *புறநானூறு* (மூலமும் உரையும்). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
[5] வி. நாகராசன். *குறுந்தொகை* (மூலமும் உரையும்). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
[6] அ. விசுவநாதன். *கலித்தொகை* (மூலமும் உரையும்). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
[7] சு. ஜெயக்குமார். *செவ்விலக்கியங்களில் மனிதநேயச் சிந்தனை.*
[8] பெ. மாதையன். *சங்க இலக்கியத்தில் குடும்பம்.*

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.